தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணைகள்
முன்னிலை : திரு.பி.போஸ், பி.இ.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு – தட்டச்சராக பணி நியமனம் – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தமை – பணியில் சேர்ந்த நாள் முதல் – பணி வரன்முறை செய்து – ஆணை வழங்குதல்.

---

ஒ1 /24338 /2014 நாள்.05.01.2016

படிக்கப்பட்டது : 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண். 5901/PSD-F/2014 நாள்13.08.2014 & 29.09.2014
2. சென்னை–6,தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணைகள் எண். ஜி3/28178/2014 நாள்.04.09.2014.
3. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணை எண். ஒ1/24338/2014 நாள் 08.09.2014
4. சென்னை–6, தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண். ஜி3/28178/2014 நாள். 16.12.2015

*****

ஆணை

மேலே எண் 1ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தமிழ் நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, இவ்வலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் தட்டச்சர்களின் பணி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அவர்கள் தட்டச்சர் பதவியில் சேர்ந்த நாள் முதல் பணி வரண்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.ரவி, தட்டச்சர் | 15.09.2014 முற்பகல் | 15.09.2014 முற்பகல் |
| 2 | திரு.ஜெ.முத்துராஜா, தட்டச்சர் | 22.09.2014 முற்பகல் | 22.09.2014 முற்பகல் |

மேற்கூறப்பட்ட பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு மாநில மற்றும் பொது சார்நிலைப் பணிகள் விதி 23 (அ) )ன்படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு

விதிகளின் கீழான விதி 32–ன் படியும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் தட்டச்சர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் பணிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. இத்தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண்.130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 22.7.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அவர்கள் பணி நியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள், District Office Manual and Directorate of Technical Education நடத்தும் Certificate Course in Computer on Office Automation என்ற பயிற்சித் தேர்வில் தேர்வு பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அவர்கள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

(ஒ.ம்)-/ பி.போஸ்
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர்,
சென்னை–14

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்,
இவ்வலுவலகம்.

நகல் –
தொழிலாளர் ஆணையர், சென்னை–6.

/ஆணையின்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர் 06/01/2016
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
இயக்குநர் அலுவலகம், சென்னை.